தெய்வத்திரு. தியாகி. S.C.சடையப்பமுதலியார், Ex.M.L.A
அவரது மனைவி. திருமதி. S.பட்டம்மாள்.



தோற்றம் : 21-08-1912 மறைவு : 24-06-1988

மறவாமல் உற்றார்நற் சின்னம்.

சித்தாந்த ரத்தினம் புலவர். **வெ.பழனியாண்டி,**
ஆசிரியர் தமிழர் திருநெறி,
புதுப்பேட்டை, பனப்பாக்கம் - 631 052.



பனப்பாக்கம் போர்டு உயர்தர பாடசாலைக்

கட்டிட நிதி சங்கம்.

ரிஜிஸ்தர் நெ. 9/1950

பனப்பாக்கம் (அரக்கோணம் தாலுக்கா)

பேரன்புடையீர்!

இந்த கிராமத்தில் டை கமிட்டியாரால் உயர்தர பாடசாலைக் கட்டிடம் ஒன்று கட்டி பூர்த்தி செய்யப்பட்டு கோடை விடுமுறை கழிந்தவுடன் இம்மாதத்திலேயே 6, 7-வது வகுப்புகள் ஆரம்பிக்க ஜில்லா போர்டு ஸ்ரீ பிரசிடெண்டு அவர்களும் ஸ்ரீ கல்வி அதிகாரி அவர்களும் அங்கீகாரம் செய்யப்பட்டு இருக்கிறபடியால் டை வகுப்புகளில் சேர விருப்பமுடைய மாணவர்கள் யாவரும் சேர்ந்து வாசிக்க கோருகிறோம். இந்த கிராமத்திய பாடசாலைக்கு சுற்றுப்புற கிராமத்திலிருக்கும் மாணவர்கள் வெளியூர் உயர்தர பாடசாலைகளில் படிப்பவர்கள் (Transfer Certificate) மாறுதல் அடையாளச் சீட்டு பெற்றுக்கொண்டு இந்த பாடசாலையில் சேர்ந்துக் கொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பனப்பாக்கம் போர்டு உயர்தர பாடசாலைக் கட்டிட நிதி சங்கம்.

காரியதரிசி,
ச. சி. சடையப்ப முதலியார்,
Provincial Congress Committee & Education Committee Member.

தலைவர்,
சாந்தா. ரா. மாணிக்க முதலியார்,
பேங்கர்.

யுனேடெட் அச்சகம், காஞ்சிபுரம்.

தியாகி S.C.சடையப்ப முதலியார் Ex. MLA அவர்களின் நூற்றாண்டு விழா

நாள் : 21-08-2011

தியாகி எஸ்.சி.சடையப்ப முதலியார் அவர்கள் பனப்பாக்கம் கிராம மக்களின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் காங்கிரஸ் பேரியக்கத்தில் சேர்ந்து மகாத்மா காந்தியடிகளின் வழியிலும், பெருந்தலைவர் காமராசர் அவர்களின் வழியிலும் எண்ணற்ற அறப்போராட்டங்களைச் செய்தவர். அதற்காக பலமுறை சிறைக்கும் சென்றவர். அத்தகைய பெருமகனாரின் நூற்றாண்டு விழா 21-08-2011 ஞாயிறு அன்று நடைபெற உள்ளது. இவ்வேளையில் அவர் சுதந்திரத்திற்காக செய்த போராட்டங்களையும், சத்தியாகிரக செயல்களையும் நினைவு கூர்வோம்.

1935 -ல் மது விலக்குப் போராட்டம். 1940 -ல் தனி நபர் சத்தியாகிரகம். இதற்காக கைது செய்யப்பட்டு சென்னையிலும், திருவள்ளூரிலும் சிறை வைக்கப்பட்டார். 1942 -ல் ஆகஸ்ட் புரட்சி (வெள்ளையனே வெளியேறு இயக்கம்) இப்போராட்டத்திற்காக தேசிய பாதுகாப்புச் சட்டப்படி வேலூர், தஞ்சாவூரில் 3 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத் தண்டனை பெற்றார். 1947 -ல் நம் நாடு விடுதலை அடைந்த பின்னர் கிராம முன்னேற்றத்திற்காக 1950 -ல் மாவட்ட ஜில்லா கமிட்டி மூலம் (District Board) உயர்தர ஆரம்ப பாடசாலையைக் கொண்டு வந்தார். பிறகு இது உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டு தற்போது இது அரசு ஆண்கள் மேனிலைப் பள்ளியாக உள்ளது.

1957 -ல் காமராசர் அவர்கள் வழிகாட்டுதலில் சட்டமன்ற உறுப்பினராக ஆக்கப்பட்டார். 1958 -ல் மருத்துவ மனை திறந்து வைக்கப்பட்டது. 1960 -ல் பேரூந்து நிலையமும் தொடங்கப்பட்டது. இவற்றை தமிழக முன்னால் முதலமைச்சர் திரு. எம்.பக்தவச்சலம் அவர்களைக் கொண்டு திறந்து வைத்தார். எந்த ஒரு விழாவாக இருந்தாலும் விழா முடியும் வரை மேடையைவிட்டு இடையில் எழுந்து செல்லாத சபை நாகரீகம் தெரிந்தவர்.

பேரூராட்சி மன்றக் கட்டிடத்தின் கால்கோள் விழா அன்றைய பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. பி.கக்கன் அவர்களைக் கொண்டு மன்றக் கட்டிடத் திறப்பு விழாவை திரு.இராமையா அவர்களைக் கொண்டும் திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து 20 ஆண்டுகள் ஊராட்சி மன்றத் தலைவராகவும், பேரூராட்சி மன்றத் தலைவராகவும் பதவி

...த்தவர். ஒருங்கிணைந்த வடாற்காடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவராகவும், செயலாளராகவும் சுதந்திர காலத்திற்கு முன்பும், பின்பும் பல ஆண்டுகள் பதவி வகித்தவர்.

நமது கிராமத்தில் மகாத்மா காந்தி அடிகளுக்கு 1949 -ல் தனிக்கோயில் அமைத்தவர்; அவர் பிறந்த நாளான அக்டோபர் 2 ம் நாளை பெரிய உற்சவமாகவே நடத்திக் காட்டியவர். அன்றைய நாளில் தேச பக்திப் பாடல்களுடன் கிராமிய நடனங்களும், ஆட்டங்களும் நடத்தி மகாத்மா காந்திஜி திருவுருவச் சிலையை தேரில் ஏற்றி வீதிதோறும் வலம் வரச் செய்தவர். ஊரின் மையப்பகுதியில் மகாத்மா காந்திஜிக்கு முழு உருவச் சிலையை அமைத்து அவ்விடத்திற்குக் குமரன் மேடை என்று பெயரிட்டவர். அன்னாரின் இது போன்ற செயல்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

அவர் தேசபக்தி மட்டுமல்லாமல் இறைவுணர்வுச் செயல்களிலும் சிறந்தவர். பனப்பாக்கம் கிராமம் அமைதியும், சுபீட்சமும் பெற இறை வழிபாட்டை இடைவிடாது மேற்கொண்டவர். அவர் காலத்தில் ஸ்ரீ மாயூரநாதர் திருக்கோயிலில் சோமவார வழிபாடு 26-01-1952 -ம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் அப்போதைய பதிவாளரும், சைவ சமயப் பாதிரியார் என்று போற்றப்பட்டவருமான திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களால் தொடக்கி வைக்க காரணமாக இருந்தவர் திரு. தியாகி எஸ்.சி.சடையப்ப முதலியார் ஆவார். இவ்வழிபாடு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. அதுமட்டுமல்லாமல் திருக்கோயிலின் மிகப் பெரிய விழாவான பிரம்மோற்சவம் இவர் காலத்தில் தொடர்ந்து நடைபெற்று வந்தது. கூத்தப் பெருமானாகிய நடராசப் பெருமானின் வழிபாடான ஆருத்ராவும், ஆனித் திருமஞ்சனமும் மிகச் சிறப்புடன் நடைபெற்று வரவும், நவராத்திரி ஒன்பது நாள் விழா மிகவும் அற்புதமான முறையில் தக்க பக்க வாத்தியங்களுடன் இந்நூலில் கண்ட முறைப்படி சிறப்பாக நடக்க இவர் முக்கிய காரணமாவார்.

அதுமட்டுமல்லாமல் மார்கழி மாதம் ஆருத்ராவின் போது பத்து நாட்களும் விடியற்காலை 4.00 மணிக்கே கோயிலுக்கு வந்து திருவெம்பாவையும், திருப்பள்ளி எழுச்சியும் மிக இனிமையாக இசை நுணுக்கத்தோடு பாடிப் பரவசமடைவார். அத்தகையோரின் நினைவைப் போற்றும் விதமாக அன்னாரின் நூற்றாண்டு விழா மலர் வெளியிடப்படுகின்றது.

இவ்வாறு நாட்டுப் பற்றும், இறை உணர்வும் தமது இரு கண்களாகக் கொண்டு வாழ்வான வாழ்வு வாழ்ந்தவர்


தியாகி எஸ்.சி.சடையப்ப முதலியாராவார். அன்னாரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு அவரது மகனார் திரு.எஸ்.சி.எஸ்.மயூரநாதன், தலைவர், பனப்பாக்கம் பேரூராட்சி மன்றம் அவர்கள் இந்த விழா மலரை வெளியிடுவது போற்றுதலுக்குரிய செயலாகும்.

இங்ஙனம்

சோமவார வழிபாட்டு மன்றம்,

ஸ்ரீ மயூரநாதர் திருக்கோயில், பனப்பாக்கம்.

வந்தேமாதரம்! ஜெய் ஹிந்த்!! மகாத்மா காந்திக்கு ஜே!!!



குடியரசு ஆரம்பதின விழா

பனப்பாக்கம்.

நம் தேசத்தின் பிதாவான "மகாத்மா காந்திஜீ" அவர்கள் நம் நாட்டின் விடுதலைக்காக அஹிம்சா முறையில் பல போராட்டங்கள் நடத்தி அரும்பாடு பட்டு பெற்ற உன்னத லக்ஷியமான "குடியரசு" நிகழும் விரோதி வருஷம் தைமீ 13உ (26—1—'50) வியாழக்கிழமை தினம் ஆரம்பமாவதை முன்னிட்டு பொதுமக்கள் அனைவரும் தங்கள் தொழில்களை நிறுத்தி வீதிகளை சுத்தம் செய்து தோரணங்களாலும், தீபங்களாலும் அலங்கரித்து அன்று நடைபெறும் விழாவில் கலந்து சிறப்பாக நடத்திவைக்க கோருகிறோம்

காந்தியம் வாழ்க!

இப்படிக்கு,

கிராம காங்கிரஸ் கமிட்டியார், பனப்பாக்கம்.

நிகழ்ச்சி நிரல்

காலை 8-மணிக்கு	குமரன் மைதானத்திலிருந்து புஷ்ப விமானத்தில் "மகாத்மாஜீயின் உருவச் சிலை"யுடன் ஊர்வலம் புறப்படுதல்.
,, 10-30	அவுட்டுகள் முழங்க குமரன் மைதானத்தில் கொடியேற்று விழா.
,, 11-00	பள்ளிக்கூட மாணவர்களால் 'பகவத் கீதையும்—காந்திஜீயும்' என்பது பற்றி சம்பாஷணை.
,, 12-00	மாணவர், மாணவிகளால் விளையாட்டும், பரதநாட்டியமும்.
மாலை 3-மணிக்கு	ஸ்ரீ திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களால், 'மகாத்மாஜீயும்—வள்ளலாரும்' என்பதைப் பற்றி கதா காலட்க்ஷேபம் நடைபெறும்.

மற்றும் பலர் பேசுவார்கள்.

ஒலிபெருக்கி உண்டு.

யுனைடெட் அச்சகம், காஞ்சி.

காந்தியம் வாழ்க !



சோளிங்கபுரம் கொண்டபாளையம்
ஸ்ரீமத் திருப்பாணாழ்வார் மடத்தில் வட ஆற்காடு ஜில்லா
ஜம்புகுளம் கிராம ஸ்ரீ நம்மாழ்வார்
சேவா நிலையத்தாரால் ஆரம்பிக்கப்படும்

ஸ்ரீ. நம்மாழ்வார். மாணவர் விடுதி திறப்பு விழா அழைப்பிதழ்

அன்புடையீர் !

சோளிங்கபுரம் பிர்காவில் ஆரம்ப பாடசாலை முதல் உயர்தர பாடசாலை வரைக்கும் இருந்துங்கூட நமது ஹரிஜன மக்களின் எண்ணிக்கை நூற்றுக்கு இரண்டு விகிதங்கூட இல்லாமலிருப்பதைக் குறித்து வருந்தாமலிருக்க முடியாது. காரணம் கிராமாந்திரங்களிலிருந்து வந்து கல்வி பயில்வதற்கு இட வசதியும் உணவு வசதியும் இல்லாமையினால் நமது மக்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. ஆதலால் ஷை நிலைய அங்கத்தினர்களின் முயற்சியாலும் ஆதரவின் பேரும் சில பெரியோர்களின் உதவியைக்கொண்டும் நிகழும் ஆங்கிலம் **5—12—'49 திங்கட்கிழமை பகல் 12-மணிக்கு,** ஷை மாணவர் விடுதி திறக்கப்படுவதால் அன்பர்கள் அனைவரும் வந்து விழாவை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

நிர்வாகஸ்தர்கள்.

தலைவர் :
ஸ்ரீமான் எஸ். ஐ. பெருமாள்தாஸ் அவர்கள் (காண்ட்ராக்டர் சாம்பியன் ரீப்)

உப தலைவர்கள் :
ஸ்ரீமான் எம். தாமோதர ராமானுஜதாஸர் அவர்கள் (காண்ட்ராக்டர் நந்தி
ஸ்ரீமான் எஸ். செல்வ நம்பி ராமானுஜதாஸர் அவர்கள் [துருகம்
ஸ்ரீமான் பி. சுதர்சனம் அவர்கள் (நிலயத்தின் தலைவர்)

கூட்டுக் காரியதரிசிகள் :
ஸ்ரீமான் கே. எம். அழகிய மணவாள ராமானுஜதாஸர் அவர்கள்
ஸ்ரீமான் எஸ். எத்திராஜு அவர்கள்

பொக்கிஷதார் :
ஸ்ரீமான் சி. நாகன் அவர்கள்

கமிட்டியார் :

ஸ்ரீமான் எம். வருளாபரணன் அவர்கள்	ஸ்ரீமான் கே. முனிசாமி அவர்கள்
,, என். சந்திர ராமானுஜம் ,,	,, கே. நாகன் ,,
,, ஜே. ரங்கநாதன் ,,	,, ஜே. குலசேகரன் ,,
,, கே. சித்தாபதி ,,	,, சி. முனிசாமி ,,

— நிகழ்ச்சி —

தலைமை வகிப்பவர்: **கனம் பூ. மு. வேலாயுதபாணி அவர்கள்**
(சென்னை சட்ட சபை அங்கத்தினர்)

விடுதி திறப்பாளர்: **கனம் ச. சி. சடையப்ப முதலியார் அவர்கள்**
(பனப்பாக்கம்)

கொடியேற்றுபவர்: **கனம் எம். சுந்தரராஜ் அவர்கள்**
(சோளிங்கர் காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி)

[illegible] திறப்பாளர்: **கனம் கே [illegible]ர். கலியாணராமையர் அவர்கள்**
[illegible]

சுதந்திரப் போராட்ட அந்நாள்

(எனது நினைவுகள்) தியாகி. S.M.சம்பந்தன், பனப்பாக்கம்.

எனது 6-வது வயதில் நல்லூர்ப்பேட்டையில் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் குமரேச சதகம், அறப்பள்ளிச்சுர சதகம், கொன்றை வேந்தன் பார்த்தசாரதி மாலை இவைகளைப் படித்தேன். பிறகு பனப்பாக்கம் பெரியத் தெருவில் தொடக்கப் பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை படித்தேன். அப்போது எனக்கு 14 வயது டி.அண்ணாமலை அவர்களின் தகப்பனார் அ.கோ.தர்மலிங்க முதலியார் மற்றும் செங்குந்த மரபினர்கள் சேர்ந்து கள்ளுக்கடை மறியல் செய்தனர். அப்போது நான் இராட்டை போட்ட கொடியைத் தாங்கி எனது நண்பர்களுடன் கள்ளுக்கடை (தற்போதைய அரசு ஆண்கள் பள்ளிக்கு (Water Tank உள்ள இடம்) அருகில் 100 அடி தூரத்தில் நின்று கொண்டு பெரியவர்களுடன் சேர்ந்து மறியல் செய்தோம்.

பிறகு நானும், எனது அன்பிற்குரிய சடையப்பரும் வினோபாஜியின் பூமிதான இயக்கில் அவரது 10 அம்ச திட்டத்தை மக்களுக்கு எடுத்துக் கூறி விளக்க மற்ற வாலிபர்களுடன் ஒரு நாளைக்கு ஒரு ஊர், இரண்டு ஊர் சென்று சுகாதாரத்தைப் பற்றியும், காந்தியடிகளின் தத்துவங்களைப் பற்றியும் கூறுவோம். ஒவ்வொருவர் வீட்டிலும் பிடி அரிசி சேர்த்து வைக்கக் கூறுவோம். ஒவ்வொரு தாய்மாரிடமும் இதனை விளக்கிக் கூறுவோம்.

ஜெயிந்த் சண்முகம், அண்ணன் சடையப்பர், நான் (சம்பந்தம்) நாங்கள் மூவரும் சேர்ந்து அமரர் தேவராஜ் அய்யங்கார் மூலமாக பாம்லேட் என்கிற பிரிட்டிஷ் ஆட்சியை அகற்ற தெருத்தெருவாக சுவர் விளம்பரம், இது இரவு 10.00 மணிக்கு மேல் நல்லூர்பேட்டையில் ரசம் என்ற பெயருள்ளவர் மற்றும் சில பேருடன் ஈடுபடுவோம்.

1941 -ல் தனி நபர் சத்யாகிரகம் நடந்தது. அதில் கலந்துகொள்ள மகாத்மா காந்திஜி எங்கள் இருவருக்கும் கையெழுத்திட்டு அனுமதியளித்தார். (அண்ணன் சடையப்பருக்கும், எனக்கும்) அதன் பிறகு நானும் சடையப்பரும் குமரன் மேடையில் நோட்டீஸ் போட்டு தனி நபர் சத்யாகிரகம் பற்றி விளக்கமளித்தும் இந்த பிரிட்டிஷ் அரசுக்கு ஆள் உதவியோ, பண உதவியோ செய்ய வேண்டாம் என்று மக்களிடம் விண்ணப்பித்துக் கொள்வோம். அப்போது அங்கு வந்த போலீசார் எங்களை அரஸ்ட் செய்யவில்லை.

பிறகு திருமால்பூர் சென்றோம், மகாதேவமுதலியார் எங்களை வரவேற்றார். கோஷங்கள் எழுப்பிக் கொண்டே கால்நடையாகவே நாகவேடு, கனகம்மா சத்திரம் நாகம்மா சத்திரம் வழியாக திருவள்ளூர் சென்றோம். அங்கு சப் இன்ஸ்பெக்டர் கோஷங்கள் போடக்கூடாது என்றார். எங்களுடன் மேலும் 3 பேர் சேர்ந்து நாங்கள் 5 பேர் ஆனோம். திருவள்ளூரில் மோதில்லால் மாங்கிலால் சவுக்கார் என்பவர் சாப்பாடு, நோட்டீஸ் முதல் எல்லா வசதியும் செய்து எங்களை ஊக்குவித்தார். முனிரத்தின முதலியார் காட்பாடி ஜின்னு, கே.வி.குப்பம் வெங்கிடாஜலம், அண்ணன் சடையப்பர் நான் (சம்பந்தம்) ஆகிய நாங்கள் ஐவரும் அரஸ்ட் செய்யப்பட்டோம். திருவள்ளூர் கிளை சிறைச் சாலையில் 15 நாள் தண்டனை பெற்றோம். 15 நாட்களுக்குப் பிறகு விடுதலை ஆனவுடன் நேராக சென்னை சென்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சென்று சங்கர நாயர், தினசரி நோட்டீஸ் போட்டுத்தர காங்கிரஸ் கமிட்டி உத்தரவுப்படி சிவஞான கிராமணியாரிடம் (ம.பொ.சி) என் வெள்ளி அண்ணா கயிறை கழற்றிக் கொடுத்தேன். பிறகு ராகவல் நாயுடு மரத்தொட்டிக்கு அருகில் நாங்கள் சத்யாகிரகம் செய்தோம். எங்களுக்கு 1 மாதம் ஜெயில் தண்டனை சென்னை சென்ட்ரல் ஜெயிலில் அடைத்தார்கள்.

1942 -ல் வெள்ளையனே வெளியேறு இயக்கம் காந்திஜி தலைமையில் நடந்தது. செய் அல்லது செத்துமடி Do or Die என்று கோஷம் எழுப்பப்பட்டது. பஞ்சாப்பைச் சேர்ந்த பகவத்சிங், சுகதேவ், ராஜகுரு இவர்கள் 3 பேரைத் தூக்கிலிட்டதைக் கண்டித்து நாங்கள் மூவரும் தெருத் தெருவாக பாட்டுப் பாடி வருவோம்

(மறக்க முடியாது மறக்க முடியாது
பகத்சிங், சுகதேவ், ராஜகுரு வை
மட்டித்தனமுள்ள முட்டாள் துஷ்டத்தனமுடன்
தூக்கிலிட்டதை மறக்க முடியாது மறக்க முடியாது)

செய் அல்லது செத்துமடி, என்ற கோஷத்தை தொண்டர்களுக்கு ஊக்கமும், அஞ்சா நெஞ்சமும், உரமும் ஊட்டியத் தலைவர்களாக ஜமதக்கினி, வேலூர் கோடையிடி குப்புசாமி முதலியார், ஜனாப் உபயதுல்லா மற்றும் பலர் பேசுவார்கள். சுதந்திரப் போராட்டத்தில் நானும் எனது நண்பர் அ.கோ.சண்முகமும் பனப்பாக்கத்தில் தந்திக் கம்பிகளை அறுத்து கிணற்றில் வீசினோம். பிறகு ஒருநாள் டிராவலர்ஸ் பங்களாவை கொளுத்தி தீயிட்டு பொசுக்கினோம். சடையப்பர் பெருமாள் கோவில் பக்கத்தில் உள்ள சாவடியை

கொளுத்தினார். (இவ்விவரம் 2005 முதல் 2010 வரையிலான காலத்தில் 8-ம் வகுப்பு சமூகவியல் பாடத்தில் பக்கம் 54, 55 -ல் பாடமாக தமிழக அரசால் வைக்கப்பட்டது) பிறகு போலீசார் விசாரித்தனர். ஊர் மக்கள் ஒருவர் கூட இதைப் பற்றி சொல்லவில்லை. அவர்கள் திரும்பி காவேரிப்பாக்கத்திற்கே சென்றுவிட்டனர்.

அதன் பிறகு 1942 ஆகஸ்டில் காஞ்சிபுரம் மேட்டுத்தெருவில் என் தாயாருக்கு சொந்தமாகவுள்ள மங்கையர்கரசியுடன் என் திருமணம் முடிந்தது. அப்பொழுது தாமல் அருகே வரும் பொழுது எங்களை போலீஸ் தேடினார்கள். எனது நண்பர் அ.கோ.சண்முகம் தலைமறைவாகிவிட்டார். என் கல்யாண வரிசை சாமான்களுடன் வண்டியில் வந்த என் மனைவியை எல்லம்மாள் கோவிலில் நில்லுங்க நான் குறுக்கு வழியில் கோவிலுக்கு வந்துவிடுகிறேன் என்றேன். மனது பயமில்லாமல் கோவில் அருகே வண்டி நிறுத்திவிட்டு நானும் என் மனைவியும் அம்மனை தரிசித்துவிட்டு மறுபடியும் இருவரும் வண்டியில் அமர்ந்து வீட்டை அடைந்து தீபாராதனை செய்தோம். அப்பொழுது நான் ஓட்டல் கடைக்கு சென்று கடையை பார்த்துக்கோ என்று தகப்பனாரிடம் சொல்லிவிட்டேன். ஆகஸ்டு போராட்டத்தில் காந்திஜி தலைமையில் தீர்மானித்தபடி நாங்கள் மூவரும் ஈடுபட்டோம். இவர்கள் தான் செய்தார்கள் என்று போலீஸ்சாரல் கண்டுபிடிக்க முடியவில்லை. இருந்தும் காவல்துறை காவேரிப்பாக்கத்தில் இருந்து வந்து எங்கள் மூவரையும் மூன்று சப் இன்ஸ்பெக்டர்கள் 7 கான்ஸ்டேபில்கள் மற்றும் சில காவல்துறையைச் சேர்ந்தவர்களும் எங்களை கைது செய்ய வந்தார்கள். முதலில் என் ஓட்டல் கடையில் தப தப என இறங்கினார்கள். நாங்கள் ஏதாவது வைத்திருக்கிறோமா என்று என்னிடம் சோதனை செய்த பிறகு உள்ளே வந்து என் கடையில் எல்லா இடங்களையும் சோதனை செய்தார்கள். அதேபோல அண்ணன் சடையப்பர் வீட்டின் எல்லா இடங்களிலும் சோதனை செய்தனர். அப்பொழுது பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்து போட்ட நோட்டீஸ்களை மட்டும் எடுத்து கொண்டார்கள். இதை எல்லாம் யார் கொடுத்தது என்று கேட்டார்கள். என் தலைவரின் (காந்தி அடிகள்) கட்டளைப்படி நாங்களே செய்தோம் என்று தைரியத்துடன் கூறினோம், தந்தி கம்பிகளையும், கம்பங்களையும் அறுத்து நாங்கள் தான் அதை கிணற்றில் இட்டோம், ட்ராவலர்ஸ் பங்களாவை கொளுத்தியது நானும் சண்முகம் செய்தவை, நீங்கள் எங்களுக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளவும் தயார், என்றும் கூறினோம். அன்றே சண்முகம்

தலைமறைவாகி காடப்பா சென்றுவிட்டார். எங்களை அரஸ்ட் செய்து அரக்கோணம் ஜெயிலில் அடைத்தார்கள். விசாணைக்காக செல்லும்போது பஸ் பனப்பாக்கம் அருகே வந்ததும் என்னை ஆள் தெரியாமல் இருக்க துணியை போலீஸ்காரர் போர்த்திவிட்டார்கள். விசாரணையின் போது என்னை பார்த்து நீ என்ன தொழில் செய்கிறாய் என்று மாஜிஸ்திரேட் கேட்டார். நான் ஓட்டல் தொழில் செய்கிறேன் என்றேன். என்னை அரக்கோணம் சிறையில் 15 நாள் காவலில் வைத்தார்கள். போலீஸ் சடையப்பரை வாலாஜா சிறையில் வைத்தனர். போலீசார் சார்ஜ் ஷீட் தயாரிக்க முடியாமல் திண்டாடினார்கள். மேல் உத்திரவு வந்தது. இந்திய பாதுகாப்பு சட்டத்தின்படி (D.I.R) கைது செய்து வாலாஜா சிறையில் இருந்து வேலூர் அவுட் கோர்ட் சிறைக்கு என்னையும், சடையப்பரையும் மாற்றினார்கள். சில நாட்களுக்கு பிறகு வெளி சிறைசாலையிருந்து உள் சிறைசாலைக்கு மாற்றினார்கள். அங்கு மலையாளம், தெலுங்கு, கன்னட விடுதலை வீரர்கள் எங்களோடு இருந்தார்கள். பி கிளாஸ் சாப்பாடு நாங்களே செய்துகொள்ள அனுமதித்தார்கள். வாரத்திற்கு ஒருவராக மதுரை ஜில்லா, கோயம்பத்தூர் ஜில்லா என்று சமையல் செய்து சாப்பிட்டோம். சிறைச்சாலையில் இடம் இல்லாததால் வட மலபார் கண்ணனூர் (கேரளா) சிறைச்சாலைக்கு நாங்கள் இருவரும் மாற்றப்பட்டோம். அங்கிருந்து தஞ்சாவூர் பாஸ்டர் சிறைச்சாலைக்கு மாற்றினார்கள். மீண்டும் வேலூர் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு 1945 -ல் விடுதலை பெற்றோம்.

காந்தீயம்

என் உயிரையே காப்பாற்றி வந்திருப்பது பிரார்த்தனைதான். பிரார்த்தனை இன்றேல், நீண்டகாலத்திற்கு முன்பே எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கும். பொது வாழ்க்கையிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் மிக கசப்பான அனுபவங்கள் எனக்கு ஏற்பட்டன. அதனால் எனக்கு மனச்சோர்வு ஏற்பட்டது. எனினும் நான் அந்தச் சோர்வை அகற்றும் ஆற்றல் பெற்றிருந்தேன் எனில் அதற்கு காரணம் பிரார்த்தனை தான்.

– மகாத்மா காந்தியடிகள்.

விழுப்புகழ் பெற்ற வித்தகர் 100 ஆண்டு காண்கிறார்

புலவர். வெ.பழனியாண்டி, புதுப்பேட்டை, பனப்பாக்கம்.

தருமை ஆதினம் - அனைத்து உலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் நான்காவது சைவசித்தாந்த மாநாடு மதுரையில் 2008 -ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21, 22, 23 ஆகிய மூன்று நாள்கள் நடைபெற்றன. அதில் அனைத்து ஆதீன குருமகா சந்நிதானங்கள், பேராசிரியர்கள், வெளிநாட்டு வாழ் தமிழ்ப் பெருமக்கள் கலந்து கொண்டனர்.

அடியேனும் கலந்து கொண்டு கட்டுரை வழங்கினேன்.

ஊரனடிகளார் நான் பனப்பாக்கம் என்று அறிந்தவுடனே, பிரம்ம உற்சவம் பண்ணுவாரே ! ஒரு எம்.எல்.ஏ அந்த ஊரா நீங்கள் என்று என்னைக் கேட்டார். ஆமாம் தியாகி ச.சி.சடையப்பமுதலியார் என்றேன்.

ஆம் ! அவரே தான். 1975 - 80 -க்குட்பட்ட ஆண்டு என நினைக்கின்றேன். அங்கு நடைபெற்ற பெருவிழாவில் 10 நாள்கள் நான் அங்கு சொற்பொழிவு செய்தேன் என்றார்கள். நான் தான் தங்கட்குத் துணையாயிருந்து வந்தேன், என்றேன். மிகவும் மகிழ்ந்தார். நல்ல மனிதர் இப்ப எப்படியிருக்கார் என்றார்கள். காலமாகிவிட்டார் என்றேன்.

இப்படி பனப்பாக்கத்துக்கு ஒரு நல்ல பெயரும், ஊர் பற்றிய பலரும் அறியும் படியான செயல்களும் செய்து வாழ்ந்தவர் சைவத்திரு தியாகி ச.சி.சடையப்ப முதலியார் அவர்கள்.

1. இளைஞர்களுக்கு எழுச்சி ஊட்டியவர் :

ஆரம்பப் பள்ளியில் நாங்கள் படித்த காலத்தில் விடுதலை நாள் விழாவில் மாணவச் செல்வங்களாகிய எங்களை ஊர்வலம் அழைத்துச் சென்று **போலோ மகாத்மா காந்திக்கு** என்பார், நாங்கள் **ஜே** போடுவோம். அத்தகு விடுதலை உணர்வை இளமையில் வளர்த்து வந்த பெருமகனார் எஸ்.சி.எஸ் என அழைக்கப்பட்ட பெருமகனார்.

மகாத்மா காந்தி, நேரு, காமராஜ், பட்டேல் போன்ற விடுதலை வீரர்கள் மீது அளவிலா பற்றுணர்வு கொண்டவர். அரசியல், ஆன்மீகம் இரண்டிலும் மிகுதியும் நாட்டங்கொண்டு செயல்பட்டவர்.

2. நாட்டுநலப்பணி :

டால்ஸ்ட்டாய் அவர்கள் அரசியல்வாதிக்கு நாட்டுப்பற்று வேண்டும்; நாட்டுப்பற்றோடு கூடிய அரசியல் நாட்டங்கொண்டவரே உண்மையான அரசியல் நடத்துவார்கள். மற்றவர்கள் தன்னலமே

காண்பார்கள் என்றுரைத்தார். அதுமட்டுமா ?

நாட்டையாளும் தகுதி தத்துவவாதிக்குத் தான் உண்டு என்றார். அதே நேரத்தில் தத்துவவாதி அரசாள - அரச பதவிபெற விரும்பமாட்டான், அரசியலிலிருந்து ஒதுங்கியே நிற்பான். மக்கள் நலன்கள் பற்றிய சிந்தனையே அவனுக்கு மிகுந்து நிற்கும் என்றார். அத்தகு தகுதி வாய்ந்தவர் தாம், அவரைப் பின் பற்றிய நம் நாட்டுத் தந்தையாம் மகாத்மா காந்தி அவர்கள். அந்த காந்தி மகானின் மீது உண்மையான பற்று மிக்கவர் ச.சி.சடையப்பனார்.

ஆம் ! நாட்டுப்பற்று மிக மிக அதிகம் கொண்டு நாட்டு நலத்தையே முதல் பணியாக மதித்து சட்டசபைக்குச் சென்று பணியாற்றியவர் நம் தலைவர் அவர்கள். தம் குடும்பம், தம்மக்கள், உற்றார், உறவினர்கள் என்பது எல்லாம் புறந்தள்ளப்பட்டு தேசிய வளர்ச்சி நலமே முன் நின்றது அவர் வாழ்க்கையில் என்றால் மிகையாகாது. இது ஊர் அறிந்த உண்மை.

அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல.

என்பது நம் அற நூலாம் வள்ளுவம். அதற்குரிய வாழ்வை வகுத்து வாழ்ந்தவர் ச.சி.சடையப்பமுதலியார் அவர்கள்.

3. கல்விப்பணி :

மாணவர்கள் கல்வி மலர நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி, ஏன் - 1978 -ல் மேநிலைப் பள்ளி பனப்பாக்கத்தில் அங்கீகாரம் பெற வீடு வீடாகச் சென்று பணம் வசூல் செய்து அரசாங்கத்துக்கு செலுத்திய பெருமைக்குரியவர். தற்போது நடைபெற்று வரும் ஆண்கள் மற்றும் பெண்கள் பள்ளிகளுக்கு இடம் ஒதுக்கி நீண்ட கால நோக்கோடு செயல்பட்ட அவர்தம் திறமையும் தற்போது விளங்கும்.

4. இறைபணி :

அரசு விழா, பள்ளி விழா மற்றும் ஆன்மீக விழா எதுவாயினும் பனப்பாக்கம் வரும் விருந்தினர்களுக்கு அன்போடு உணவளித்து பெருமை சேர்க்கும் பெருந்தகையாளர்.

ஆடவல்லான் இவரது குடும்ப வழிபடு கடவுள். அருள்மிகு மாயூரநாதர் சவுந்தரநாயகி திருக்கோயில் சோமவார வழிபாட்டில் தோய்ந்து நின்றவர்.

எங்கள் புதுப்பேட்டை சிறு கிராமத்தில் ஒவ்வொரு ஆண்டும் மே கோடை விடுமுறையில் 10 நாள்கள் பெரியபுராண தொடர்

சொற்பொழிவு அவர் தலைமையில் தான் நடைபெற்று வந்தது. அதற்குத் துணைய்யாக நல்லூர்ப்பேட்டை புலவர் ப.உ.நடேசனார் இருந்து வழிகாட்டுதல் செய்தார்.

5. விடுதலை வீரர் :

கல்வித் தொண்டாகட்டும், நாட்டு நலப்பணியாகட்டும் தன் நேரடிப் பார்வையில் முன் நின்று நடத்தி பெருமை சேர்க்கும் பெருமைக்குரியவர் ச.சி.ச அவர்கள். துணிவு மிக்க விடுதலைப் போராட்ட வீரர் அவர். தியாகி. சண்முகம், தியாகி.சம்பந்தம் ஆகியவர்கள் மற்றும் பலர், இவருடன் விடுதலை போராட்டத்துக்குத் துணை நின்று பெருமை பெற்றவர்கள். திருமுறை பாடுங்கால் உணர்வு தோய்ந்து இசை வெளிவரும். இன்னும் எவ்வளவோ அவரைப் பற்றிய சிந்தனைகள் விரிப்பில் பெருகும்.

6. வித்தகரின் உள்ளம் :

நூற்றாண்டு விழா காணும் அன்னாரின் வாழ்வு நிலைகள் அனைவருக்கும் வழிகாட்டி என்பதில் ஐயமில்லை.

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர் போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவரவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம் எனத்தேர்ந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் செய்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ

என்று இராமலிங்க சுவாமிகள் பாடியுள்ளார் நடராசர் நடம்புரியும் திருக்கோயில் **அம்பலம்** சடையப்பர் அவர்களின் திருவுள்ளம் என்பது யாராலும் மறுக்க இயலாது. அவர் அடிக்கடி பனப்பாக்கம் மாயூரநாதர் திருக்கோயிலில் சபாநாயகர் முன்னிலையில் பாடும் பாடலும் இதனை உறுதி செய்யும். **மலையரையன் மகளைவிட் டுருகரந் தொருவராய் மண்டையில் இரந் துண்டனை** எனத் தொடங்கும் பாடல் நம் மனதில் நீங்கா நினைவாய் இருக்கும் என்றால் அது மிகையாகாது. அந்த வித்தகரின் வாழ்க்கை நமக்கெல்லாம் வழிகாட்டட்டும் அன்னாரின் நூறாண்டு தொடக்க நாளில். அவரின் வாழ்நாள் ஒரு **உன்னத சகாப்தம்** என்றால் தவறாகாது.

என் தலைவர் தியாகி திரு. ச.சி.சடையப்பமுதலியார்

திரு. D.அண்ணாமலை, பனப்பாக்கம்.

தியாகி திரு. ச.சி.சடையப்பமுதலியார் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகின்ற இந்த நல்ல வேளையில் என் மனதில் அவரின் நினைவுகளில் சிலவற்றை இங்கே சொல்வதில் பெருமைப்படுகிறேன்.

தியாகி திரு. ச.சி.சடையப்பமுதலியார் நூற்றாண்டு விழா சிறப்புற்று அமைய என மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

தியாகி சடையப்பமுதலியார் ஒரு பன்முகத் தோற்றம் கொண்டவர். ஆம் ! அவர் ஒரே சமயத்தில், பல நல்ல பண்புகளைக் கொண்டவராக திகழ்ந்தார்.

அவர் ஒரு உத்தமர், தியாகி, சுதந்திர போராட்ட வீரர்,

அவர் ஒரு நேர்மையான சட்டமன்ற உறுப்பினர்,

அவர் ஒரு நல்ல நகர மன்றத் தலைவர்,

அவர் ஒரு கடவுள் பக்தி நிறைந்த ஆன்மீகவாதி.

அவர் ஒரு தியாகி :

வெள்ளையனே வெளியேறு என்ற கோஷத்துடன் சுதந்திர போராட்டத்தில் பங்கு கொண்டு ஆங்கிலேய அடக்கு முறைக்கு ஆட்பட்டு சிறைக் கொடுமைகள் பலவற்றை அனுபவித்தவர். தன் குடும்பத்தைத் துறந்து பல மாதங்கள் சிறை வாழ்க்கையை அனுபவித்தவர். சிறைவாசத்தின்போது பெருந்தலைவர் காமராஜ் போன்ற ஒப்பற்ற தலைவர்களோடு தோழமை கொண்டவர். அவர் சிறைக்கு சென்றுவிட்டதால் அவர் செய்து வந்த வியாபாரத்தில் அவருக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. குடும்பத்தார் அனைவரும் அவரை நினைத்து மிகவும் வருந்தினர். இதையெல்லாம் கேள்விப்பட்ட போது மனம் தளராமல் எனக்கு வீடு பெரிதல்ல, நாடுதான் பெரிது என்று சிறை வாழ்க்கையை மனம் உவந்து ஏற்றுக் கொண்ட உத்தமர். அப்படிப்பட்ட உத்தமரை நாட்டுக்கு அர்ப்பணித்த அந்த குடும்பம் போற்றுதலுக்கு உரியதாகும். இந்த கிராம மக்கள் என்றும் பெருமைக்குரியவர்கள் ஆவர்.

அவர் ஒரு நல்ல நேர்மையான சட்டமன்ற உறுப்பினர் :

இந்தக் காலத்தில் ஒருவர் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட சீட் கேட்டு கீழ் மட்ட தலைவர்களில் இருந்து மேல் மட்டத் தலைவர்கள் வரை பலரை பலமுறை நடையாய் நடந்து மிகவும் சிரமப்பட்டு சீட் வாங்குவதை எல்லா கட்சிகளிலும் நாம் பார்த்து வருகிறோம். ஆனால் 1957 -ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட முதலமைச்சர் காமராஜரே முன்வந்து தன்னை நேரில் வந்து பார்க்கச் சொல்லி ஆள் மூலம் சொல்லியனுப்பிய போது திரு. தியாகி சடையப்பமுதலியார் தலைவரை பார்க்க புறப்பட்ட போது அவருடைய குடும்பத்தார் மற்றும் நெருக்கமான உறவினர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக திரு. சடையப்பமுதலியாரை தேர்தலில் நிற்க வேண்டாமென்றும், திரு.காமராஜரைப் போய் பார்க்க வேண்டாம் என்றும் சொன்னார்கள். ஏற்கனவே சிறைக்கு சென்றதால் நம் வியாபாரத்தில் ஏற்பட்ட நஷ்டம் பெரியதாக உள்ளது, இப்பொழுது தேர்தலில் நின்றால் அதற்காக நிறைய பணத்தை செலவழிக்க வேண்டி வரும். எனவே தேர்தலில் யார் சொன்னாலும் நிற்க வேண்டாம் என்று சொன்னார்கள். குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு அவரும் அதை ஏற்றுக் கொண்டார். இருப்பினும் காமராஜரே சொல்லி அனுப்பிய பிறகும் தான் அவரை போய் பார்க்காமல் இருப்பது சரியல்ல. அது மரியாதை குறைவான செயல். அதனால் நீங்களும் வாருங்கள் நாம் நேரில் சென்று காமராஜரிடம் நம்முடைய நிலைமையை நேரில் சொல்லிவிட்டு வருவோம் என்று சொல்லி முக்கியமான ஒரு சிலரை அழைத்துக் கொண்டு காமராஜரை நேரில் போய் பார்த்து தங்கள் நிலைமையை சொன்னார்கள். காமராஜர் அவர்கள் எப்பொழுதும் நேர்மையானவர்கள், நம்பிக்கையானவர்களை கைவிடமாட்டார். அந்த வகையில் காமராஜர் அவர்கள் சடையப்பமுதலியாரை சிறையில் அவரின் நேர்மையையும், பண்பையும் பார்த்து அவர்மீது மிகவும் பரிவுகாட்டியிருக்கிறார். அதனால் திரு காமராஜர் அவர்கள், திரு. சடையப்பமுதலியாரும் அவருடன் வந்தவர்களும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேட்காமல் தானே முன்வந்து நீதான் அரக்கோணத்தில் வேட்பாளர், போய் வேட்புமனு தாக்கல் செய்து தேர்தல் வேலையைப் பார். யாரும் அவரை தடுக்க வேண்டாம் வெற்றி உனக்கே, நான் இருக்கிறேன், கவலைப்படாதே என்று வாழ்த்தி அனுப்பினார். அதற்கு மேல் யாரும் மறுப்பு சொல்ல முடியாமல், வந்து தேர்தலில் வேட்பு

மனு தாக்கல் செய்து தேர்தல் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டனர். அந்த தேர்தலில் தியாகி சடையப்பமுதலியார் அவர்கள் அரக்கோணம் தொகுதியிலிருந்து மிகப் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இவரின் வெற்றி ஒரு சரித்திர வெற்றி. ஆம் ! அந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் இவரைப் போல் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளரைவிட அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர் யாரும் இல்லை. இது சரித்திர வெற்றியாகும். இது அவரின் சாதனை வெற்றி.

இவர் சட்டமன்ற பணிகளை செவ்வனே செய்து முடித்தார். நேர்மையானவராகவும், ஊழலற்றவராகவும் வாழ்ந்து அனைவரின் பாராட்டுதலையும் பெற்று மாவட்டத்திலேயே மிகவும் உயர்ந்த தலைவராக திகழ்ந்தார். ஒருங்கிணைந்த வடாற்காடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி பொதுச் செயலாளராகவும், பின்பு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவராகவும் பல்லாண்டு பணியாற்றினார். காமராஜர் அவர்களின் நம்பிக்கைக்கு உரியவராக திகழ்ந்ததால் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலும், மாவட்ட காங்கிரஸ் கமிட்டியிலும் அனைவரும் இவரிடம் மிகுந்த மரியாதையுடனும், நட்புணர்வுடனும் பழகி வந்தார்கள். அதேபோல் அமைச்சர்களும் இவர் மீது பற்றும், பரிவும் கொண்டவர்களாக இருந்தார்கள். இவர் தன்னலம் கருதா பொதுநலத்தொண்டர் என்பதால் அமைச்சர்களும், அதிகாரிகளும் இவர் எந்த நேரத்தில் எந்த கோரிக்கை வைத்தாலும் அதை மறுக்காமல் செய்து தந்தார்கள். மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்களால் எதையாவது சாதிக்க முடியாமல் போனால் இவரின் உதவியை நாடி இவர் மூலமாக தங்கள் காரியங்களை பூர்த்தி செய்து கொண்டார்கள். நேர்மையான செயலாக இருந்தால் கண்டிப்பாக அதை பூர்த்தி செய்து கொடுப்பார். சட்டத்துக்கு புறம்பானதாக இருந்தால் அதை எந்தக் காரணத்தை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இவர் ஒரு நல்ல நகர மன்றத் தலைவர் :

பனப்பாக்கத்தில் முறையான பள்ளிக்கூடம் இல்லாததால் இவர் தலைவராக வந்த பிறகு தன்னுடைய நண்பர் ஒருவரின் வீட்டில் தொடக்கப்பள்ளியை தொடங்கினார். பின்பு பள்ளிக்கு வருகின்ற மாணவர்களின் எண்ணிக்கை அதிகமானதால் அதற்காக பள்ளியை விரிவுபடுத்த வேண்டி இருந்ததால், பனப்பாக்கம் கிராமத்தின்

பொதுமக்கள் பேராதரவோடு மாடு மேய்ச்சல் புறம்போக்காக இருந்த மிகப் பெரிய மைதானத்தில் பல அறைகள் கொண்ட மிகப் பெரிய கட்டிடம் கட்டி அதை கல்வி மந்திரி கனம் திரு. மாதவமேனன் அவர்கள் தலைமையில் முதலமைச்சர் திரு. காமராஜர் அவர்களை கொண்டு திறப்பு விழா செய்தார். சிறிய பள்ளியாக தொடங்கப்பட்ட பள்ளி பின்பு நடுநிலைப்பள்ளியாக உயர்ந்து பின்பு உயர்நிலைப் பள்ளியாகவும், அதைத் தொடர்ந்து மேநிலைப் பள்ளியாகவும் உயர்ந்து ஆயிரக் கணக்கில் மாணவர்கள் கல்வி பயிலும் பள்ளியாக உரு எடுத்தது. அதற்காக முதலமைச்சர் திரு. காமராஜ், முதலமைச்சர் திரு. பக்தவத்சலம், நிதி அமைச்சர் திரு. சி.சுப்பிரமணியம் போன்றவர்களின் ஒத்துழைப்பால் பல கட்டிடங்களை கட்டி பள்ளியை மேலும், மேலும் விரிவுபடுத்தினார். இன்று மிகப்பெரும் கட்டடங்களைக் கொண்ட பள்ளியாக உருவாகியிருப்பதற்கு அவரின் சீரிய முயற்சியே காரணம்.

அதேபோல் பனப்பாக்கத்திற்கென சொந்தமாக ஒரு சிறப்பானதாகவும் நல்ல வெளிச்சமும், காற்றோட்டமும் உள்ளதான ஒரு பெரிய மருத்துவமனை கட்டிடத்தையும் கட்டி அதை அரசிடமே ஒப்படைத்தார்.

அதைப்போலவே பேரூராட்சிக்கென்று ஒரு கட்டிடத்தை சிறப்பான முறையில் கட்டி அதை அப்போதைய ஊராட்சித்துறை அமைச்சர் திரு. பூவராகவன் அவர்களைக் கொண்டு திறப்பு விழா செய்தார். அந்த காலத்தில் மாவட்டத்திலேயே சிறந்த பேரூராட்சி மன்ற கட்டிடம் என்றும், குறிப்பாக பேரூராட்சி மன்ற கூட்ட அரங்கத்தை அவர் வடிவமைத்ததை பார்த்தவர்கள் எல்லாம் இதுபோல் இந்த மாவட்டத்தில் வேறு எங்கும் இல்லை என்றும் பாராட்டினார்கள். அவர் காலத்தில் கட்டிய கட்டிடங்கள் எல்லாம் மிகவும் வலுவானதாகவும், நூறு ஆண்டுகள் ஆனாலும் ஒரு ஓட்டை, ஒழுகல் அல்லது வெடிப்பு போன்ற எந்த குறைபாடுகளும் நேராதபடி மிக நேர்த்தியாக கட்டப்பட்டன. அதனால் தான் தற்போது அதே கட்டிடத்தின் மேல் மேலும் ஒரு அடுக்கு மிகப் பிரம்மாண்டமானதாகக் கட்டி முடித்து இருக்கிறார்கள். இவைகள் எல்லாம் திரு. தியாகி சடையப்பமுதலியாரின் சாதனைகள் ஆகும்.

இவர் கடவுள் பக்தி நிறைந்த ஆன்மீகவாதி :

அவர் காலத்தில் பல கோயில்களை சீரமைத்தார். சில கோயிகளை புதுப்பித்து குடமுழுக்கு செய்தார். குறிப்பாக

பனப்பாக்கத்தின் நடுநாயகமாக வீற்றிருக்கும் ஸ்ரீ மாயூரநாதப் பெருமான் மீது அளவு கடந்த பக்தி கொண்டவர். அதிலும் மேற்படி கோயிலில் இருக்கும் ஸ்ரீ நடராஜப் பெருமானை தன்னுடைய குல தெய்வமாகவே போற்றி மகிழ்ந்தார். மேற்படி ஆலயத்தில் பல வருடங்கள் பிரம்மோத்சவம் செய்து சிறப்பித்தார். அது சமயம் தமிழ் நாட்டில் மூலை முடுக்கில் இருந்தெல்லாம் மிகச் சிறந்த சொற்பொழிவாளர்கள், நாதஸ்வர வித்வான்கள், தேவார இசை ஓதுவார்கள், பிரபலமான ஆண், பெண் பாடகர்கள், நாடக, நாட்டிய கலைஞர்கள், நாட்டுப்புறக் கலைஞர்கள் இவர்களையெல்லாம் வரவழைத்து மேற்படி விழாவை சீரோடும், சிறப்போடும் நடத்துவார். அதுபோலவே கடவுளர் சிலைகளை எல்லாம் மிகவும் சிறப்பாக அலங்காரம் செய்து தானும் மகிழ்ந்து, மக்களையும் மகிழ்விப்பார். மிகப்பெரிய ஊர்களுக்கு இணையாக கச்சேரி, வாணவேடிக்கை எல்லாம் நடத்தி மிகப் பிரம்மாண்டமாக திருவிழாவை நடத்துவார். அனைவரும் பார்த்து பிரமித்து பாராட்டுகின்ற வகையில்தான் விழாவை நடத்துவாரே தவிர யாரும் முகம் சுளிக்கின்றவாறு விழவை நடத்தமாட்டார். அதை போன்ற விழா நடத்துவதற்கு அவருக்கு நிகர் அவர் ஒருவரே. அவரால் இந்த ஊர் பெருமை பெற்றது.

அவர் காலத்தில் தான் இந்த ஊருக்கு மின்சாரம் கொண்டுவரப்பட்டது. தெருவெங்கும் விளக்குகள் பொறுத்தப்பட்டன. மணல் சாலையாக இருந்த சாலைகள் செப்பனிடப்பட்டு கிராவல் போடப்பட்ட சாலைகளாகவும், ஓரிரு இடங்களில் தார் சாலையாகவும் ஆனது. பேரூராட்சியில் துப்புரவு பணியாளர்கள் நியமிக்கப்பட்டு தினசரி தெருவெங்கும் துப்புரவு செய்யப்பட்டது. ஊர் முழுவதும் சாலைகளின் இரு புறத்திலும் கருங்கற்களைக் கொண்டு கழிவு நீர் கால்வாய் கட்டப்பட்டது. மேநிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டப்பட்டு அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தெருக்குழாய்கள் மூலம் வழங்கப்பட்டது. பின்பு அனைத்து வீடுகளுக்கும் குழாய் இணைப்பு வழங்கப்பட்டது.

தியாகி திரு. சடையப்பமுதலியார் அவர்கள் எல்லா நிலைகளிலும் ஓர் உயர்ந்த மனிதர். நல்ல பண்பாளர், உத்தமர், ஊழலற்ற அரசியல்வாதி, ஊழலையே செய்யத் தெரியாத ஒரு நல்ல மனிதர், உண்மையான தேசபக்தி கொண்ட தியாகி, காந்தியவாதி இப்படி அவரைப் பற்றி எவ்வளவோ சொல்லிக் கொண்டே போகலாம்.

இங்கே நான் குறிப்பிட்டவைகள் எல்லாம் ஏதோ

சம்பிரதாயத்துக்காக சொன்ன வார்த்தைகள் அல்ல. நானே நேரிடையாக அவரோடு பல்லாண்டுகள் மிகவும் நெருக்கமாக பழகி பார்த்து நேரில் அறிந்து கொண்டவைகள்தான். இவை அனைத்தும் என் ஆழ் மனத்தில் அவரைப் பற்றி பதிந்த உண்மையான சுவடுகள்.

எனக்கு அவர் தலைவராகவும் இருந்தார், வழிகாட்டியாகவும் இருந்தார், என்றும் நினைத்து போற்றுகின்ற நண்பராகவும் இருந்தார். **தமிழ் நாட்டில் கர்மவீரர் காமராஜரின் ஆட்சிக் காலம் ஒரு பொற்காலம் என்று சொல்வார்கள். அதுபோலவே பனப்பாக்கத்திற்கு தலைவர் தியாகி திரு. ச.சி.சடையப்பமுதலியாரின் காலம் ஒரு பொற்காலம். இதில் அனுவளவும் சந்தேகமில்லை.**

எனக்கு நீண்ட நாட்களாக ஒரு ஆசை. பனப்பாக்கம் பேரூராட்சி மன்றத்தின் முகப்பில் சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக தலைவராக இருந்த தலைவர் தியாகி **திரு. ச.சி.சடையப்பமுதலியார் அவர்களின் திருஉருவச் சிலையை அமைப்பது இப்பொழுது அவரின் நூற்றாண்டு விழாவை சிறப்பிப்பதுபோல் ஆகும்.** அதுதான் இந்த ஊர்மக்கள் அவருக்குச் செய்கின்ற நன்றியாகும். இந்த எனது ஆவலை அனைத்து மக்களின் உள்ளங்களிலும் சென்று சேர்க்க எல்லாம் வல்ல எம்பெருமான் ஸ்ரீமாயூரநாதன் பெருமானின் பொன்னார் திருவடிகளை போற்றி பணிந்து வேண்டுகிறேன்.

தலைவர் தியாகி திரு. ச.சி.சடையப்பமுதலியாரின் நூற்றாண்டு விழாவை கொண்டாடி மகிழும் அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

காந்தீயம் வாழ்க, காமராஜ் புகழ் வாழ்க,

தியாகி. திரு. சடையப்பமுதலியார் புகழ் ஓங்குக.

நன்றி ! வணக்கம்.

இந்து மதத்தின் வலிமை !

இந்து மதம் என்பது ஏதோ ஒரு கோட்பாட்டையோ, கொள்கையையோ நம்புவதற்கானதல்ல. போராட்டங்களிலும், முயற்சிகளிலும் அடங்கிவிடாது. அதுவெறும் நம்பிக்கை மட்டும் அல்ல; அது உணர்தல், உணர்ந்து அதுவாக ஆதலே இந்து மதம்

– சுவாமி விவேகானந்தர்.

அன்புறு சிந்தையர்

சித்தாந்த சரபம். திருமுறைமணி, புலவர். **எ.வேலாயுதன்,** எம்.ஏ.,

திருஞானசம்பந்தர், தொண்டை நாட்டிற்கு வருகைபுரிந்து. திருமாற்பேறு இறைவனை,

திரையார்பாலியின் தென்கரை மாற்பேற்று
அரையானே ! அருள் நல்கிட்டே ! என்று பாடுகின்றார்.

இதில், அலையார் பாலியாற்றின் தென்கரையின் திருமாற்பேறு உள்ளதைத் தெரியலாம். இப்போது பாலாறு காஞ்சிபுரத்தின் தெற்கில் 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. கால வெள்ளம் இது.

திருமாற்பேறு வழிபட்டு திருவல்லம் சென்றதிருஞானசம்பந்தர் அங்கிருந்து பாலாற்றின் வடபால் உள்ள தலங்களை வழிபட்டுச் செல்கிறார் என்று தெரிவிக்கின்றது திருத்தொண்டர் புராணம். ஆக பாலாற்றின் தென்கரையே சென்று திருவல்லம் வழிபட்டார் என்று தெரிகின்றது.

திருமாற்பேற்றின் மேற்கில் 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது பனப்பாக்கம் என்னும் பனசைத் திருநகரம். இங்கு அருள் பாலிக்கும் அருள்திரு சவுந்தரிநாயகி உடனாய மாயூரநாதர் - புலியும், மயிலும் பூசித்த புண்ணியமூர்த்தி; இவருடைய திருவருளைப் பரவும் பனசைப்புராணம் பாலாற்றின் தென் கரை பனப்பாக்கம் என்று குறிப்பிடுகின்றது. ஆகவே திருஞானசம்பந்தர் பனப்பாக்கம் வழியாகத் திருவல்லம் சென்றார் என்பது உறுதியாய்த் தெரிகின்றது.

அருள்திரு மாயூரநாதரைத் திருஞானசம்பந்தர் பாடியதாகத் திருப்பதிகம் இல்லையெனினும் திருஞானசம்பந்தர் முத்துச் சிவிகையின் பனப்பாக்கம் வழியாக மேவிச் சென்றார் என்பது மெய்ம்மை என்பதை திருத்தொண்டர் புராணம் உணர்த்துகின்றது. முதலாம் இராசராசனின் காந்தளூர்ச் சாலை எனத் தொடங்கும், கல்வெட்டுடைய திருக்கோயில். ஆகவே, மிகு பழமை வாய்ந்தது இக்கோயில்.

இக்கருத்துரையை சோமவார வழிபாட்டில் ஒருநாள் யான் பேசியபோது கேட்டுப் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தவர் தியாகி. ச.சி.சடையப்பமுதலியார். மேலும் பல்லாண்டுகளுக்கு முன்னர் பனப்பாக்கத்தில் பெரும்புலவர் பலர் இருந்ததும் ஞானியார் சுவாமிகள் முதலிய பலர் பனப்பாக்கம் வந்து சென்றதும் வாய்ப்பு வரும்போதெல்லாம் பேசி மகிழும் பெருந்தன்மையுடையவர் அவர். கிருபானந்தவாரியார், தொண்டை மண்டலாதீனம் 229 ஆம் பட்டம்

சந்நிதானம் (முத்து. சு.மாணிக்கவாசக முதலியார்) முதலிய அருளாளர்களையும், ஔவை நடராசன் முதலிய அறிஞர்களையும் தம் இல்லத்தே உபசரித்துப் பெருமகிழ்வுற்றவர்.

நல்லதென்று தெரிவதனை, இதயபூர்வமான உணர்வுடன் முன்னின்று செய்யும் இயல்புடையவர். ஆடல்வல்லான் நடராசப் பெருமான் திருவடி பரவும் மரபில் தோன்றியவர். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றவர். அங்கும் பல அறிஞர் உடனிருந்து அவர்தம் கருத்துரைகளைச் செவிமடுத்து உயர் சிந்தனையும், நாட்டுப்பற்றும் பெருகப் பெற்றவர்.

நாடு விடுதலை பெற்றபின் அரக்கோணம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். தமக்கோ, தம் குடும்பத்திற்கோ சொத்துக்களை அப்போதும் சேர்க்காதவர் இவர். தனக்கெனமுயலும் தன்மையின்றி, பிறர்க்கெனமுயலும், அன்புறு சிந்தையால் தொண்டாற்றியவர்.

இவரால் பயன் பெற்றவர் பலர். பனப்பாக்கத்தில் உயர் தொடக்கப்பள்ளி தோன்றியதும், பின்னர் உயர்நிலைப் பள்ளியாகி, மேனிலைப் பள்ளியாக மலர்ந்ததும் உயர் தொண்டின் வளர் நிலைகளாகக் கண்டவர் இவர்.

சைவசித்தாந்தப் பெருமன்றத் தலைவராக விளங்கிய சச்சிதானந்தம் பிள்ளை. வடாற்காடு மாவட்டத் திருக்கோயில்களில் 1951 -ல் வார வழிபாட்டுச் சபைகளைத் தோற்றியபோது, பனப்பாக்கம் அருள்திரு. மாயூரநாதர் திருக்கோயில் சோம வார வழிபாட்டுச் சங்கம் தோன்றியது. இதன் மூலம் மகாசிவராத்திரித் திருமுறை ஓதல், நவராத்திரி, கார்த்திகை சோமவார விழா முதலிய பெருவிழாக்களை மிகச் சிறப்பாக அன்பர்களுடன் முன்னின்று நடத்தினார். சித்திரைப் பெருவிழா தனிச் சிறப்புடையது.

புதுப்பேட்டை, சேக்கிழார் மன்றத்தின் பெரியபுராணப் பெருவிழா பத்து நாளும் தலைமையேற்று சொற்பொழிவுகளை அசைவின்றி இருந்து கேட்பார். இவர்க்கு வாய்த்த கேள்விச் செல்வம் அளப்பரியது, செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம், என்றும், அருட்செல்வம் செல்வத்துட் செல்வம், என்றும் தெரிவிக்கின்றார் திருவள்ளுவர். பனப்பாக்கம் பெற்ற செல்வர்களுள், இது பற்றியே மிகு பெருஞ் செல்வர் இவர் என்று பேசுகின்ற அறிஞர்களும், இசைவாணர்களும் இவரைப் போற்றுவதுண்டு.

தமிழக சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் வார வழிபாட்டில், நெற்றியில், திருநீறும், சந்தனத் திலகமும் துலங்க, மேல் துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு, அன்பர்களுடன் முன்வந்து பாடி வருகின்ற எளிமையும் கண்டு எல்லோருக்கும் எளியேனுக்கும் இவர்பால் எப்போதும் ஓர் ஈர்ப்பு உண்டு. சேக்கிழார் மன்றத் திருத்தல வழிபாடுகளில் உடன் வந்து கலந்து காசி - ரிசிகேஷ் வரை வழிபட்டவர் இவர்.

பனப்பாக்கம் பெரும் புலவர்களையும், திருமுறை வாணர்களையும், திருநீற்று மெய்யன்பர்களையும் பெற்ற வழி வந்த சிலர் வாரவழிபாட்டில் தேவாரப் பாடல்களை பிழையின்றிப் பாடுதல், இசை நிறைவோடு பாடுதல் வேண்டும். சிறிது பிழைபடப் பாடினாலும் பாவம் என்று சொல்லிச் சொல்லி, எல்லோரும் பாடுதல் இன்றி சிலர் மட்டுமே பாடவும், பிறர் கேட்டுக் கொண்டுப் பின் தொடரவும் வழக்கமாக இருந்தது. இதனால் பலர்க்குப் பாடுவதற்கு ஆர்வம் இருந்தும் ஒன்றிரண்டு திருப்புகழ், அருட்பா பாடுதலுடன் அமைதியுற்றனர். இவரும் வாயாரப்பாடும் ஆர்வமுடையவர். மேற்கண்ட செய்திகளால் பின்னிருந்தே பாடிக் கொண்டுவந்தார். 1970 - 71 என்று கருதுகின்றேன். யான் வழிபாட்டுச் சொற்பொழிவில் திருஞானசம்பந்தர் பற்றிப் பேசும்போது,

கோழைமிடறாக கவிகோளுமிலவாக விசை கூடும் வகையால்
ஏழையடியாரவர்கள் யாவை சொனசொல் மகிழும் ஈசனிடமாம்
தாழையிளநீர் முதிய காய்கமுகின் வீழநிரை தானுசிதறி
வாழையுதிர் வீழ்கனிகள் ஊறிவயல் சேறுசெயும் வைகாவிலே

என்னுந்திருப்பாடலில், ஏழையடியார் அவர்தம் இசை கூடும் வகையால் பாடுகின்ற, சொல்கின்ற சொல்லையும் மகிழ்வுடன் கேட்டருளும் ஈசன் என்றருள்கின்றார் பிள்ளையார் என்றும் அன்புடன் பாடுதல் முதன்மை, தற்பெருமையாய்ப் பாடுதல் கூடாது, கைதட்டல், தொடைதட்டல் முதலிய அங்க சேட்டையின்றி, அன்புடன் மென்தாளமிட்டுத் துதித்துப் பாடுதல் வேண்டும் என்றும் தெரிவித்தேன்.

விலாச காஞ்சி என்று வானவிபு ரேத்து நகரதிற்
பலாச வின்னிறங்கொளம்மை யோடமர்ந்து பண்ணவர்
எலாஞ்சமூக மாகிவந் திறைஞ்சி யேத்த, இன்பமோடு
உலாசமா மாயூரநாதன் உற்றிருப்பனா மரோ !

என்கின்ற திருப்பனசைப் புராணம் பண்ணவர், இசை பாடுகின்றவர்,

எல்லாரும் அன்புடன் சேர்ந்து உயர்வு தாழ்வு கருதாமல், ஒரே சமூகமாக ஒருமையுடன் இறைஞ்சியேத்த இன்பமோடு உலாசமா மயூரநாதன் உற்றிருப்பன், என்று குறிப்பிடுவதை, எடுத்துரைத்ததும் இவர் பெரிதும் மகிழ்வுடன் பாராட்டினார். மற்றவர்களும் மகிழ்ந்தனர். யாவரும் தேவாரம் பாடுதற்கு விருப்புற்றனர். இந்த நிகழ்விற்குப் பிறகு வழிபாட்டுக்கு சிறிது கால தாமதமாக வருபவர்கள் எல்லாரும் இவரே பாடுகின்றார். மற்றவர்க்கு வாய்ப்பு தருவதில்லை என்று பேசும் நிலைமையும் உருவாயிற்று. சிறந்த பாடகர், பேச்சாளர் என்று பேரெடுத்தால் எப்போது வேண்டுமாயினும் செல்லலாம் என்னும் நிலைமை மாறியது. யாவரும் தேவாரம் பாடலாம் என்னும் நம்பிக்கை அன்பர்களிடையே மிளிர்ந்தது. அன்புறு சிந்தையும் ஆர்வமிகு கேள்விச் செல்வமும் இவர் பெற்ற பெருஞ் செல்வங்கள். இவர்தம் வாழ்வில் யான் கண்டதும் இவையே ! கொண்டதும் இவையே ! குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல் என்கின்றது திருக்குறள். இம்முறையில் பனசை நகர் இவரை நோக்குமாயின் இவர்க்கு சிலை வைத்துக் கொண்டாடி நன்றி பாராட்டுக ! நலம்.

எல்லோரையும் மதியுங்கள்

நெருப்பு என்று எடுத்துக் கொண்டால் அது சிவபெருமானின் வடிவம். அதன் சூடு பராசக்கி. அதன் செம்மை மகாகணபதி. அதன் ஒளி முருகப்பெருமான். எல்லாம் ஒன்று தான். ஆனால், அந்த ஒரே பொருளை வெவ்வேறு வாயிலாக நாம் உணர்கிறோம். நெருப்பு சுடுகிறது. பிரகாசமாக இருக்கின்றது. சிவந்த நிறத்தில் இருக்கின்றது. ஆனால், நெருப்பு என்பது என்னவோ ஒரே பொருள்தான் !

அதேபோல எல்லா உயிர்களும் ஈசனின் கோவில்களே. அதனால், எல்லா உயில்களையும் மதிப்பது நம் கடமையாகும். இதுவே மேலான அறமும் ஆகும்.

– கிருபானந்தவாரியார்.

உங்கள் வாழ்க்கை புனிதமாக ...

வாழும் குறுகிய காலத்தில் தெய்வ சிந்தனையுடன், தளராத நம்பிக்கையுடன், வேறுபாட்டு உணர்வை நீக்கி, எல்லாம் தெய்வத்தின் உருவங்களே என்று உணர்ந்து வாழுங்கள். உங்கள் வாழ்க்கை புனிதமாகும். நாடும் உலகமும் நன்மை பெறும்.

– சாயிபாபா.

இகபரச்செல்வர்

வாரியார் சீடன். எஸ்.வி.சண்முகனார்,
ஆன்மீக இன்னிசை கலா ரத்னா, சைவசித்தாந்த இரத்தினம்,
சைவத் திருமுறை நெறிச் செல்வர்,
பனப்பாக்கம்.

பார்போற்றும் பனசையம் பதியில் சடையன் வகையறாவில் 19 -ம் நூற்றாண்டில் ஒரு பொற்காலம் நிகழ்ந்தது.

அருள் மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் இம்மண்ணுலகத்தில் 1906 - தோன்றிய பிறகு 1912 -ம் ஆண்டு சடையன் சின்னையாவிற்கும், அமுதம்மாளுக்கும் தோன்றியவர் ச.சி.சடையப்பனார்.

இவர் இளமையிலிருந்தே தேச பக்தியும், சிவ பக்தியும் கொண்டவராக இருந்தவர். தமக்கு இரு கண்களாக தேசத் தொண்டும், சிவத்தொண்டும் கொண்டவர்.

இயல், இசை, நாடகம் என்பதில் மிகுந்த நாட்டம் கொண்டு வாழ்ந்தவர். அரிச்சந்திரனாக நடித்து சிவபிரானை இசையாலும், சொல்லாலும் வணங்கியவர். ஒரு சில மருத்துவர்கள் தரும் மருந்தினால் நோய் நீங்கும் அவரை கைராசிக்காரர் என்பார்கள். அதுபோல, ச.சி.சடையப்பனார் எதை ஆரம்பித்து வைத்தாலும் ஆல் போல் தழைத்து அருகு போல் வேரூன்றி விருத்தியடையும் என்ற நம்பிகை உண்டு.

என் வாழ்க்கையில், வியாபார விருத்திக்கு நாள் பார்த்து அவர் திருக்கரத்தால் புத்தகத்தில் புதுக்கணக்கு துவக்கித் தந்ததால் இக சுகத்தை பெரிதும் பெற்றவர்களில் நானும் ஒருவன்.

இதுபோல், பனப்பாக்கம் நூல் வியாபாரி, சேலை வியாபாரி போன்றவர்கள் நலமுடன் வாழ்ந்து கொண்டு இருப்பதை கண் கூடாக காண்பவன் நான் என்றால் மிகையாகாது.

புலியும், மயிலும் பூசித்த அருள்மிகு சவுந்தரிநாயகி உடனாய மாயூரநாதர் ஆலயத்தில் முத்தாய்ப்பாக இருந்து தொண்டு ஆற்றியவர். 27 அருளாளர்கள் வழங்கிய பன்னிரு திருமுறைகளும், அவருக்கு அத்துபடி. மார்கழி திருவாதிரை விழாவில் திருவெம்பாவை பாடி சிவப்பேறு பெற்றவர். ஆனந்த தாண்டவனே அவருக்கு உயிர் மூச்சு, ஆருத்ரா, ஆனித்திருமஞ்சன விழாவில் திருவூடல் நிகழ்வில் நடேசனுக்கும், சிவகாமி அம்மைக்கும் ஊடலைத்

தீர்க்க சுந்தரராக வேடமிட்டு காட்சி அளிப்பார்.

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமி, அழகரடிகள், ஊரன் அடிகள், காஞ்சிபுரம் விநாயக ஓதுவார், புண்ணியகோடி ஓதுவார், பாரதப்பிரசங்கி சுந்தரமூர்த்தி பாரதியார், அங்கம்பாக்கம் முருகேச முதலியார் இன்னும் பல ஆன்மீக அன்பர்களை வரவேற்று உபசரித்து பிரியாவிடை தருவதை ச.சி.சடையப்பனாரிடம் கற்றுக்கொள்ள வேண்டும். எப்படி ? நல்லூர்ப்பேட்டை சிவபூஜாதுரந்தரர் புலவர். ப.உ.நடேசனார் உடன் வரச் செய்வார் நாதஸ்வர பேரொளிகள் தொப்பை பண்டிதர் கணேச பண்டிதர் இரட்டையர்கள் போன்று மங்கள இசை வாசிக்க, மங்கையர் திலகங்கள் அவரவர் தெருவிலே நீர் தெளித்து கோலமிட்டு சிவாச்சாரியார் இரத்தின குருக்கள் கும்ப கலச மரியாதை அளிக்க அவர்களை சிவாலயத்திற்கு வருகை புரிய ஆவன செய்தவர் ச.சி.சடையப்பனார்.

அரசியலில் பனப்பாக்கத்தை ஒரு கோட்டையாகக் காட்டியவர். கக்கன் முதல் காமராசர் வரை கரை படியாத கர்ம வீரர்களையும், ம.பொ.சிவஞானம் போன்ற தமிழ்ப் பற்றுடையவர்களையும், சமய நால்வரில் வயோதிக அப்பர் சுவாமிகளாகவே நடித்த நடிகர் திலகம் சிவாஜி கணேசரையும் தம் இல்லத்தில் இனிய அறுசுவை அமுது படைத்து உடம்பெடுத்த பயனைப் பெற்றவர் ச.சி.சடையப்பனார். மஹாத்மா காந்தி அடிகளுக்கு பஜனை மடம் நிறுவி, ரகுபதி ராகவ ராஜாராம் என்ற குரலோசை எழும்பச் செய்தவர் ச.சி.சடையப்பனார்.

பேருந்து வண்டியில் காசி யாத்திரையாளர்களை அழைத்து புலவர். திருமுறைமணி, எ.வேலாயுதம், புலவர். இலக்குமணன், புலவர். சைவசித்தாந்த இரத்தினம் வெ.பழனியாண்டி முதலியோர் உடன் வழித்துணைக்கு வர, காசி விஸ்வநாதரையும், விசாலாட்சி அம்மை, அன்னபூரணி அம்பாளையும் தரிசிக்க பெருந்துணையாக, அருந்துணையாக, பெரிய மனிதராகவும் வழி நடத்தி சென்றவர் ச.சி.சடையப்பனார். மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாக வழிபட முக்கியஸ்தராக, முத்தாய்ப்பாக உதவியவர். பெற்ற தாய், தந்தையர்க்கு காலம் தாழ்த்தாது உணவளிக்கும் மைந்தர்களைப் போன்று டி.அண்ணாமலையாரும், ப.கோ.பச்சையப்ப முதலியாரும் காசி யாத்திரையில் உணவு சமைத்து உபசரித்தார்கள். இத்துணை சுகமான காசி யாத்திரைக்கு கங்கா ஜலம் போல பசிப் பிணியையும் மாற்றிய பெருமை சடையனார்க்கே ! என்று வாழ்த்தி வணங்குகின்றேன்.

வாழ்க நலம் !

வள்ளுவர்வழி வாழ்ந்த வாய்மையாளர்

பெரியாரைத் துணைக் கொள், பேதமை அகற்று, என்ற ஆணைகள் ஔவை பிராட்டியார் அருளியவை. பெறுதற்கரியது மானிடப்பிறவி, இதனைப் பெற்றோர் யாவரும் இவ்வாணைகளின்படி நடந்து, தெய்வீக நிலையை அடைந்து தமக்கும் பிறர்க்கும் உரியராய் வையத்து வாழ்வாங்கு வாழ வேண்டும்.

இதற்கு வழிவகை செய்வதற்காக இறைவன் ஞானியர்களையும், சித்தர்களையும் ஆன்மீக தொண்டர்களையும் வாழையடி வாழையென அனுப்பியருளுகின்றான். அந்த திருக்கூட்ட மரபைச் சார்ந்த ஒரு பெரியாராக விளங்குகின்றவர் உயர்திருவாளர் தியாகி ச.சி.சடையப்பனார் அவர்கள். இவர்தம் வாழ்க்கையில் பல படிப்பினைகளை கற்று வாழ்நாள் முழுவதும் இந்த பனசை மாநகரை தன் ஆளுமையில் வைத்து பல நல்ல செயல்கள் புரிந்து நகரை வளர்ச்சிப் பாதையில் நடத்தி வந்தவர்.

இவர் நகர தந்தையாகவும், காங்கிரஸ் பேரியக்க தலைவராகவும், கர்மவீரர் கு.காமராஜர் அணுக்க தொண்டராகவும், அவருடன் சட்டமன்ற உறுப்பினராகவும் விளங்கி இந்த நகருக்கு பெருமை சேர்த்தார். ஸ்ரீ மாயூரநாதர் ஆலயத்தில் பிரம்ம உற்சவ விழா நாட்களில் தன் உடல்நிலையையும் கருதாமல் இரவு பகலாக இறை தொண்டிலே காலத்தை செலுத்தியவர். ஆலயத்தில் புலவர் பெருந்தகை சைவத்திரு. ப.உ.நடேசனார், தேவாரம் கோவிந்தராஜ முதலியார், நவராத்திரி செங்கல்வராய முதலியார் போன்ற பல சிவ தொண்டர்களுடன் சேர்ந்து சோமவார வழிபாட்டை துவக்கி 50 ஆண்டு காலம் சீரும் சிறப்புமாக நடத்தி மக்களை ஆன்மீக நெறியில் ஈடுபாடு செய்த பெருமை இவரையே சாரும். சோமவார வழிபாட்டு சபையின் நோக்கமே மக்களை பக்தியில் ஈடுபாடு செய்து அருள் நெறியை அடையும்படி செய்வதற்காகவே, இறைவன் பெருமையை எல்லாச் சமயங்களும், மதங்களும் பல கோணங்களில் பக்தியை பரப்புகின்றன. அங்கிங்கெனாதபடி ஜோதி சொரூபமாய் விளங்கும் சிவபெருமானை அவரவர் நிலைக்கேற்ப மக்கள் உருவ வழிபாடு செய்து வருகின்றனர்.

சைவம் சிவன் என்றும், காணாபத்தியம் கணபதி என்றும்
கௌமாரம் முருகன் என்றும், சாக்தம் சக்தி என்றும்
வைணவம் திருமால் என்றும், இஸ்லாம் அல்லா என்றும்
கிருத்துவம் ஏசு என்றும் ஜைனம் அருகர் என்றும்

பல மார்க்கங்களில் நாம் இறைவனை வழிபடுகின்றோம். எந்தெந்த பெயரில் சொன்னால் பாமர மக்களை இறையுணர்வை உணருவார்கள் என்று ஞானிகளும், பெரியோர்களும் நினைத்தார்களோ அந்தந்த பெயரில் மக்களை வழிநடத்தி வழிபட்டு வந்தனர். ஆனால் ஆண்டவன் ஒருவனே அவனை நம்முள்ளே காண முடியும் என்ற தத்துவத்தை வள்ளல் இராமலிங்க அடிகளார் நமக்கு உணர்த்தி உள்ளார்.

விறகில் தீயினன் பாலில் படு நெய் போல்
மறைய நின்றுளன் மாமணி சோதியான்

என்ற அப்பர் சுவாமிகள் வாக்கின்படி மனிதன் தன் மனத்தைத் தூய்மைப்படுத்தி இறைவனை காண வேண்டும். அதற்காக நாம் மனம், வாக்கு, காயத்தை தூய்மைபடுத்த வேண்டும்.

சிறு நெருப்பை கொண்டு பெரு நெருப்பை பெறுவது போல உயிர்கள் மீது நாம் கொள்ளும் அன்பினால், தயவினால், ஜீவ காருண்யத்தால் மட்டுமே இறையருளைப் பெற முடியும்,

பிற உயிர்களிடம் கருணை காட்டுங்கள்,

பிற உயிர்கட்கு தீங்கு செய்யாதீர்கள்,

மாமிசம் உண்டு பிற உயிர்களை வதைக்காதீர்கள்.

இறைவனை அடைய நான்கு விதமாக ஒழுக்கங்களை முதலில் மனிதன் கடைபிடிக்க வேண்டும்.

இந்திரிய ஒழுக்கம் : பிறரை கோபியாதீர்கள், கருணையுடன் பாருங்கள், இனிமையாக பேசுங்கள், இறைவன் ஸ்தோத்திரத்தை கேளுங்கள், சைவ உணவை உண்ணுங்கள், பிற உயிர்களின் துன்பத்தை போக்குங்கள்.

கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் ஆகிய ஒழுக்கங்களை மனிதன் நியதியாக கடைபிடித்து இறைவனை காண முற்பட வேண்டும்.

கரைசேரப் புரிந்தாலும் கடையேன் செய்குற்ற மெல்லாங் கருதிமாயைத்
திரைசேரப் புரிந்தாலும் திருவுளமே துணையென நான் சிந்தித்து இங்கே
உரைசேர இருத்தலன்றி உடையாய் என்னுறவே என்னுயிரே என்றன்
அரைசே என்னம்மே என்னப்பா இச்சிறியேனால் ஆவது என்னே ?

வஞ்சமில்லா மனத்தினர் வருந்தினால் அப்போதே ஆண்டவன் அருள்கின்றான். அப்படிப்பட்ட இறைவனை பாமரமக்கள் வழிபட ஏதுவாக இருந்தவர் பெரியவர் தியாகி ச.சி.சடையப்பமுதலியார்

அன்னாரின் நூற்றாண்டு விழா மலரினை அவர்தம் அருமை மகனார் எஸ்.சி.எஸ்.மாயூரநாதன், பேரூராட்சி மன்றத் தலைவர் அவர்கள் வெளியிடுகிறார் என்பது பெரும் மகிழ்விற்கு, உரிய ஒரு நிகழ்வு.

சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே

என்ற புறநானூற்று வரியையும் மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி, என வரும் திருக்குறள் அடியையும், இந்த நறுநூல் நினைப்பூட்டுகிறது.

தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

என்ற திருக்குறள் வழியில் வாழ்ந்திருந்த அனுபவ ஞானியும், தியாகியும், சமுதாய தொண்டருமான மாண்புமிக்க பெரியார் திரு. ச.சி.சடையப்ப வள்ளல் புகழ் ஆல் போல் தழைத்து நிற்க வேண்டுமாய் எல்லாம் வல்ல ஸ்ரீ சௌந்தரி நாயகி உடனுறை ஸ்ரீ மாயூரநாதப் பெருமான் திருவருளை வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
ப.உ.ந.சதானந்தம்,
நிர்வாகி,
ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் வழிபாட்டு சபை,
பதிவு : தமிழ்நாடு தெய்வீகப் பேரவை, சென்னை.
நல்லூர்ப்பேட்டை, பனப்பாக்கம்.
வேலூர் மாவட்டம் - 631 052.

மனமே உனக்கென்ன வாய்

ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் - சீ சீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்.

- அருள்திரு. குருஞானசம்பந்தர்,
தருமையாதீனம் குருமுதல்வர்.



வேலூரில் 26-1-1973 -ந் தேதியன்று நடந்த குடியரசு விழாவின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஆறுமுகம் அவர்கள் தியாகி S.C.சடையப்பமுதலியார் அவர்களுக்கு தாமிர பத்திரம் வழங்கிய போது எடுத்த படம்

தியாகி S.C.சடையப்பமுதலியார் தலைமையில் M.L.C, M.L.A க்கள், விடுதலை வீரர்கள் 1942 ஆகஸ்ட் புரட்சியில் தண்டணைப் பெற்று விடுதலை பெற்றதற்கான அரசு உத்திரவு

Government of Madras

Abstract

Political agitation - Civil disobedience movement - North Arcot Cudappa and Malabar districts — Security prisoners - Sri. Sadayappa Mudaliar and 17 others - Release ordered.

= =

G.O.Nos.Ms.1551 Public (General) Dept. Dated 27-6-1945.

ORDER:-

His excellency the Governor of Madras hareby directs that the following security prisoners detained under the orders mentioned against each be released immediqtely.

Name of detenu	No. & date of order of detention.
1. Sri. Sadayappa Mudaliar.	Chief precretary's proceeings No.56649-22 dated 8-11-1943
2. " K.Ranga Reddi ..	No.56855/9 Dated 5-11-1943
3. " Y.B.Konda Reddi ..	No.52895-2 " 23-10-1943
4. " K.Madhava Menon.MLC	G.O.SA.35/42 Public Dt. 9-8-1942
5. " K.A.Damodaran Menon	" 38/42 " 9-8-1942
6. " K.Kelappan ..	" 33/42 " 9-8-1942
7. " C.K.Govinda Nair.MLA	" 25/42 " 9-8-1942
8. " M.P.Narayanan Menon.	Chief Secretary's Proceedings No.60989-1 Dated 26-11-1943
9. " E. Moidu Moulvi	" No.60989-2 " 26-11-1943
10. " A. Karunakara Menon MLA	" No.60989-3 " 26-11-1943
11. " K.P.Ramunni Menon	" No.60989-6 " 26-11-1943
12. " M.P.Govinda Menon	G.O.SA.27/43 Public Dt. 9-8-1942
13. Dr. P. Govindan Nair ..	Chief Secretary's Proceedings
14. Sri.V.K.Sankaranarayanan "	No.60989-7 Dt.26-11-43
15. " T.K.Narayanan "	No.60989-16 Dated 26-11-1943
16. " Shamiji Sundradas .. "	No.60989-19 Dated 26-11-1943
17. " K.M.Ramunnai Menon "	No.60989-20 " 26-11-1943
18. " Kottia Menakkadan Soman	No.60989-23 " 26-11-1943
	No.60989-25 " 26-11-1943


/By order of his Excellancy the Governor/

Sd..........
Under Secretary to Government.

To
The Inspector of General of Prisons.
" Superintendent, Central Jail, Vellore.

To
Sri. S.C. Sadyappa Mudaliar, No.25, Ennaikara St. Big Conjeevaram

/True Copy/



தியாகச் சுடர்கள் மூவர்
திரு. S.M.சம்பந்தமுதலியார்,
தெய்வத்திரு. S.C.சடையப்பமுதலியார்,
தெய்வத்திரு. ஜெயிந்த் சண்முகமுதலியார்.



பனப்பாக்கம் வருகையின்போது
பெருந்தலைவர் காமராஜருடன்
தியாகி S.C.சடையப்பமுதலியார்,



பனப்பாக்கம் மயூரா திரையரங்கில் நடைபெற்ற காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தின் போது எடுத்த புகைப்படம்



[இடம்:திருமால்பூர்]

25.6.1975. தியாகி ச.சி.சடையப்ப முதலியார், பெருந்தலைவர் காமராஜ், தியாகி எஸ்.எம்.சம்பந்தம்